இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை (இரண்டாம் அரையாண்டு) – **2006/2007**
**ESP 1107 -** கலைத்திட்டக் கொள்கையும் நடைமுறையும்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 01.12.2007 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி I

01. "கல்வியலாளர் அல்லாதவர்களுக்கு 'கலைத்திட்டம்' என்ற பதம் பொதுவாக பாடநூல்கள், வழிகாட்டி அல்லது கற்கை நெறி ஒன்றுடன் தொடர்புபட்டதாகவே காணப்படும். கல்வியாளர்களுக்கு இப்பதம் பரந்துபபட்டளவில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருக்கும்". நீங்கள் கற்ற கலைத்திட்டம் பற்றிய வரைவிலக்கணம் ஒன்றை கருத்திற் கொண்டு இக்கூற்றை விளக்குக.

02. "காலத்திற்கு காலம் கலைத்திட்டம் மாற்றமடைவது இன்றியமையாதது". நான்கு காரணிகள் தருக.

03. இலங்கையில் இரண்டாம் நிலை வகுப்புகளில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட 5 E கற்றல் கற்பித்தல் மாதிரியின் 5 படிகளைப் பெயரிடுக.

04. "மையக் காலத்திட்டம்" , "ஒன்றிணைந்த கலைத்திட்டம்" வேறுபடுத்துக.

05. ஆர். டைலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியின் நான்கு படிகளையும் பட்டடியலிடுக.

06. CIPP மதிப்பீட்டு மாதிரியின் அடிப்படை படிகளை பெயரிடுக.

07. கலைத்திட்ட அமுலாக்கலில் ஆசிரியர் ஒருவரின் மூன்று தொழிற்பாடுகளை சுருங்கக் கூறுக.

08. கலைத்திட்டம் ஒன்றின் கிடைநிலை, குத்தான தொடர்புகளை விளக்குக.

(5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. I. தேர்ச்சி மையக் கலைத்திட்டமொன்றின் மூன்று அபிலாசைகளை விளக்குக.
(05 புள்ளிகள்)

II. கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஆசிரியர் ஒருவரின் கடத்தல், பரிமாற்றம், நிலைமாற்றல் வகிபாகங்களை வேறுபடுத்திக் காட்டுக.
(05 புள்ளிகள்)

III. நடைமுறையிலுள்ள இரண்டாம் நிலை பாடசாலைக் கலைத்திட்டம் ஆசிரியர் ஒருவருக்கு நிலைமாற்றல் வகிபங்கினை ஆற்றுவதற்கு எந்தளவு தொடர்புடையது என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

10. I. கலைத்திட்டத்தினை மதிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று பிரதான காரணிகளை கலந்துரையாடுக.
(05 புள்ளிகள்)

II. கலைத்திட்ட மதிப்பீட்டில் பயன்படும் மூன்று மாதிரிகளை பெயரிடுக.
(05 புள்ளிகள்)

III. நீங்கள் கூறிய மாதிரிகளில் ஒன்றை தெரிவு செய்து கலைத்திட்ட மதிப்பீட்டில் அதன் வினைத்திறனை பரிசீலிக்க.
(10 புள்ளிகள்)

11. I. இலங்கையில் பாடசாலைக் கலைத்திட்டமொன்றை சிறப்பாக அமுல்படுத்துவதற்கு தடையாக அமையும் காரணிகளை பரிசீலிக்க.
(10 புள்ளிகள்)

II. இத்தடைகளை எவ்வாறு வெற்றிகொள்ளலாம் என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

12. I. “கலைத்திட்ட அபிவிருத்தி” என்பதால் நீங்கள் யாது கருதுகிறீர்கள். விளக்குக.
(05 புள்ளிகள்)

II. கலைத்திட்டமொன்றின் நோக்கங்கள், குறிக்கோள்களை தீர்மானிப்பதில் கருத்தில் கொள்ளப்படும் காரணிகளை சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

III. நடைமுறையிலுள்ள இரண்டாம் நிலை பாடசாலைக் கலைத்திட்டத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் சுருக்கமாக ஆராய்க.
(10 புள்ளிகள்)

13. I. கலைத்திட்ட முகாமைத்துவம் என்ற எண்ணக்கருவினை விளக்குக.
(05 புள்ளிகள்)

II. கலைத்திட்ட முகாமைத்துவத்தில் அதிபர்களின் வகிபங்கினை ஆராய்க.
(05 புள்ளிகள்)

III. கலைத்திட்ட முகாமைத்துவத்தில் ஆசிரியர் ஒருவர் அதிபருக்கு எந்தளவில் உதவலாம். விளக்குக.
(10 புள்ளிகள்)

14. பின்வருவனவற்றில் யாதாயினும் இரண்டிற்கு சுருக்கக் குறிப்பு எழுதுக.

I. 1972இன் புதிய கல்வி மறுசீரமைப்பின் பிரதான பண்புகள்

II. கூட்டுச்சோதனை, அமைப்பாக்க சோதனை.

III. கலைத்திட்டத்தின் பொருத்தப்பாடு.

IV. கலைத்திட்ட அபிவிருத்தியில் தேசிய கல்வி நிறுவனத்தின் வகிபங்கு

(10 x 2 = 20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)